DEPOSITION OF WITNESS

---

IN THE COURT OF SUBORDINATE JUDGE, DEVAKOTTAI.

| | | |
|---|---|---|
| MCOP.No. | : | 49/2018 |
| Deposition of Witness for | : | P.W.1 |
| | : | D.W. |
| | : | R.W. |
| | : | Court. |
| Name | : | சபீர் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 45 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 12.03.2026

**முதல் விசாரணை:**

நான் மனுதாரர் நிறுவனத்தில் ஓட்டுநராக பணிபுரிகின்றேன். நான் மனுதாரர் தரப்பில் 1வது சாட்சியாவேன். நான் இத்துடன் தாக்கல் செய்துள்ள நிரூபணவாக்குமூலத்தை முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். எனது தரப்பு கீழ்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1. 08.06.2015 தேதியிட்ட வேப்பூர் காவல் நிலையத்தில் குற்ற எண்.122/2015 தாக்கல் செய்த முதல் தகவல் அறிக்கை உண்மை **நகல் ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**
2. 06.02.2015 தேதியிட்ட TN–04–AZ–0689 வண்டியின் இன்சூரன்ஸ் பாலிசி உண்மை **நகல் ம.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**
3. 07.01.2025 தேதியிட்ட விபத்தில் லாரி ஓட்டி வந்த ஓட்டுநரின் ஓட்டுநர் உரிமம் **உண்மை நகல் ம.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

4. 09.06.2015 தேதியிட்ட TN65– N 1623 அரசுப் பேருந்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் ஆய்வறிக்கை **உண்மை நகல் ம.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**
5. TN65– N– 1623 பேருந்திற்கு சரிபார்ப்பதற்கான பில்கள் **அசல் ம.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணை**

1. எனக்கு நீதிமன்றத்தில் இருந்த அழைப்பாணை எதுவும் வந்ததா என்றால் இல்லை. எங்களுடைய அரசு போக்குவரத்து கழகத்தின் மேலாளர் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் சாட்சியம் அளிக்க வந்தேன் என்றால் சரிதான். இந்த விபத்தின் போது நான் தான் அரசு பேருந்தின் ஓட்டுநர் என்றால் சரிதான். விபத்தின் போது நான் எந்த திசையில் இருந்து எந்த திசையை நோக்கி சென்றேன் என்றால் வடக்கில் இருந்து தெற்கு நோக்கி சென்றேன். இந்த விபத்தை ஏற்படுத்திய வாகனம் எந்த வாகனம் என்றால் லாரி ஆகும். இந்த விபத்தில் நான் தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேனா என்றால் ஆமாம். லாரி பேருந்திற்கு முன்பக்கம் சென்றதா அல்லது பின்பக்கம் சென்றதா என்றால் எனக்கு முன்னால் இடது புறமாக சென்ற வண்டி ஆகும். நான் அந்த லாரியை கடந்து செல்லும் போது இந்த விபத்து நடந்ததா என்றால் இல்லை லாரி வலது புறமாக திரும்பும் போது நான் ஒலி அடித்ததால் இடது புறமாக திரும்பியதால் லாரியின் பின்புறம் அரசு பேருந்து மோதியது. இந்த விபத்திற்கு உண்மையான காரணம் நான் தான் பேருந்தை அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் ஓட்டியதால் இந்த விபத்து ஏற்படுத்தியது என்றால் சரியல்ல. இந்த விபத்தில் ரூ.19,588 எங்கள் அரசு பேருந்தை சரிசெய்வதற்கு செலவு ஆனது என்று சொன்னால் சரிதான்.

2. அரசு பேருந்தால் ஏற்படும் விபத்திற்கு பழுது நீக்குவதற்கு தனியாக அரசாங்கம் மூலம் ஆட்களை நியமிப்பது வழக்கம் என்றால் சரிதான். அவருகளுக்கு அரசாங்கம் சம்பளம் கொடுக்கிறது என்றால் சரிதான். நான் ரூ.19,588/– வாகனம் பழுது நீக்கியதற்காக கொடுத்துள்ள பில் ஆனது வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்று சொன்னால் சரியல்ல. இந்த விபத்திற்கு காரணம் நான் என்பதால்

என்னுடைய கவனக்குறைவால் இந்த விபத்து ஏற்பட்டது என்பதால் எதிர்மனுதாரர் நிறுவனம் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்). திருமதி.P.கலை, நிலா, M.L.,
சார்பு நீதிபதி,
தேவகோட்டை.